**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.751/2022**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அருண்குமார் | தொழில் | : தனியார் கட்டுமான தொழில் |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஓடைப்பட்டி | வயது | : சுமார் 32 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 24.06.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை சங்கதிகளை முழுமையாக படித்து பார்த்தேனா என்றால் ? ஆமாம், படித்து பார்த்தேன். வாதி வழக்குரையில் சொல்லியுள்ள கொடி வழி ஜாபிதாவை ஒப்புக் கொள்கிறேனா என்றால் ? ஆமாம். முத்துச்சாமிகவுண்டர், அவரது மகன் துரைச்சாமி, அவரின் மக்கள் கவிதா மற்றும் கலியுகவரதன் என்ற வரதராஜ் (3-ம் பிரதிவாதி) ஆகியோர் ஒட்டன்சத்திரம் கிராமத்தில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்விக சொத்துக்களை 30.05.1990ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். ஆனால், அந்த ஆவணத்திற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3-ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரி கவிதா, மற்றும் அவரது தகப்பனார் ஆகிய மூவருக்கும் B ஜாபிதா சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ? வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களின் விபரங்களை

தெரிந்து கொண்டு வழக்கிற்காக வேண்டி தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் B ஜாபிதாவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன மூன்று நபர்களும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் வழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. பாகப்பிரிவினையில் 3-ம் பிரதிவாதிக்கும், அவரது தகப்பனாருக்கும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் A ஜாபிதா சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் ? அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களில் தனக்கு உள்ள பாதி பாகத்தை துரைச்சாமி, அவரது மகன் 3-ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி பாகபாத்திய விடுதலை கொடுத்துவிட்டார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. 3-ம் பிரதிவாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் ? ஆமாம், படித்து பார்த்துள்ளேன். கூடுதல் எதிர்வழக்குரைக்கு நான் பதில் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். 3-ம் பிரதிவாதி வரதராஜ் என்பவருக்கு பாகப்பிரிவினையில் கிடைத்த ஒரு பகுதி சொத்தினை 08.05.2008ம் தேதியில் ஒரு கணேசன் என்பவருக்கு வா.சா.ஆ.4ன் மூலமும், அதேபோல் மற்றொரு பகுதி சொத்தினை 31.07.2008ம் தேதி வா.சா.ஆ.5ன் ஆவணத்தின் வழியாகவும், ஒரு ராமசாமி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து கிரைய தொகையாக ரூ.23,50,000 பெற்றுக் கொண்டார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய தொகை முழுவதும் 3-ம் பிரதிவாதி தனது தாயார் பெயரில் பாங்க் ஆப் இந்தியா ஒட்டன்சத்திரம் கிளையில் சேமிப்பு கணக்கில் 31.07.2008ம் தேதி வைப்பீடு செய்தார் என்றால் ? இல்லை. 3-ம் பிரதிவாதியின் தாயார் ஈஸ்வரி என்பவருக்கு தனிப்பட்ட வருமானமும், சொத்துக்களும் இல்லை என்றால் ? சொத்துக்கள் உள்ளதா என்று எனக்கு தெரியாது. ஆனால் தனிப்பட்ட முறையில் வருமானம் உள்ளது. வருமானம் என்பது நான் இந்த வழக்கு சொத்துக்களில் இருந்து வரக்கூடிய

வருமானத்தை தான் நான் வருமானம் என்று சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. 3–ம் பிரதிவாதி சொத்துக்களை விற்பனை செய்ததை ஏற்காத அவரது தாயார் கிரைய தொகையை தன் வங்கி கணக்கில் போடவேண்டும் என நிர்பந்தம் செய்ததில் தாயாரின் உணர்வை புரிந்து கொண்டு 3–ம் பிரதிவாதி அவரது தாயாரின் வங்கி கணக்கில் மேற்படி கிரைய தொகையினை செலுத்தியுள்ளார் என்றால் ? இல்லை. 3–ம் பிரதிவாதியின் தாயாருக்கு தாவா சொத்துக்களில் இருந்து வருமானம் இல்லை என்று சொல்லியுள்ள நிலையில் வேறு என்ன வருமானம் வருகிறது என்றால் ? அவர் உள்ளூரில் வட்டிக்கு பணம் கொடுத்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். 3–ம் பிரதிவாதி கடந்த 29.07.2010ம் தேதி அவரது தாயார் வங்கி கணக்கில் இருந்தும், காசோலை வழியாகவும், ரொக்கமாகவும் பணத்தை எடுத்து வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலமாக கருப்புசாமியிடமிருந்து ஒட்டன்சத்திரம் கிராமத்தில் 861 சதுரடி அளவுள்ள ஒரு மனையிடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் ? மனையிடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதை நான் ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். ஆனால் பணத்தினை அவரது தாயாரின் வங்கி கணக்கில் இருந்து எடுத்து கிரையம் பெற்றாரா என்று எனக்கு தெரியவில்லை. 3–ம் பிரதிவாதி அவரது தாயாரின் வங்கி கணக்கில் இருந்து பெற்ற தொகையை கொண்டு கடந்த 31.05.2011ம் தேதி வழக்கு சொத்துக்களில் சர்வே எண்.130/2A5 வடபுறம் 3.46 ஏக்கர் வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் பழனிச்சாமி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் ? அது தவறு. வாங்கியது உண்மை. அது சுய சம்பாத்தியத்தில் இருந்து வாங்கியது ஆகும். சுயசம்பாத்தியத்தில் இருந்து வாங்கவில்லை என்றாலும், சரிவர தெரியாமல் வழக்கிற்காக வேண்டி சுயசம்பாத்தியத்தில் வாங்கியதாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. வழக்கு சொத்துக்களான சர்வே எண்.130/2A5 தென்புறம் சரிபாதியான ஏக்கர் 3.46 யை R.ராஜா என்பவர் கடந்த 08.06.2011ம் தேதி வா.சா.ஆ.8 மூலம் பழனிச்சாமி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் ? ஆமாம், கிரையம்

வாங்கியுள்ளார். ராஜாவும், 3–ம் பிரதிவாதியும் கடந்த 30.01.2012ம் தேதி வா.சா.ஆ.9 மூலம் ஒரு பரிவர்த்தனை ஆவணம் பதிவு செய்து கொண்டு 3–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 861 சதுரடி மனையிடத்தை ராஜாவுக்கு கொடுத்து அவரிடமிருந்து வழக்கு சொத்துக்களான சர்வே எண்.130/2A5ன் தென்புறம் 3.46 ஏக்கர் அதில் கீழ்புறம் ஏக்கர் 1.20 போக பாக்கி மேல்புறம் ஏக்கர் 2.26 யை பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றால் ? சரிதான். நானும், எனது தாயாரும் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11 மூலம் கிரைய ஆவணங்கள் பதிவு செய்த தேதியில் சர்வே எண்.130/2A5 ஏக்கர் 6.92ல் வடபுறம் பாதி ஏக்கர் 3.46ம், தென்புறம் பாதி 3.46, மேல்புறம் ஏக்கர் 2.26ம் 3–ம் பிரதிவாதி வரதராஜ் என்பவருக்கும், தென்புறம் பாதி ஏக்கர் 3.46ல் கீழ்புறம் ஏக்கர் 1.20 ராஜாவுக்கும் பாத்தியப்பட்டு இருந்தது என்றால் ? சரிதான். 3–ம் பிரதிவாதிக்கு 27.08.2013ம் தேதி திருமணம் நடைபெற்றது என்றால் ? திருமணம் ஆனது தெரியும், ஆனால் திருமண தேதி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் 1–ம் வாதி அதிசயா என்பவர் கடந்த 06.06.2013ம் தேதி பிறந்தார் என்றால் ? சரிதான். 3–ம் பிரதிவாதி பூர்விக சொத்துக்களை விற்றதன்மூலம் கிடைத்த தொகையை கொண்டு வழக்கு சொத்துக்களை கிரையம் பெற்றததால் அவைகளும் பூர்விக சொத்துக்கள் என்றே சட்டப்படி கருத வேண்டும் என்றால் ? சரியல்ல. 3–ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் ஆழ்துளை கிணறு மூலம் தண்ணீர் எடுத்து சுத்தீகரிப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விற்பனை செய்து வந்தார் என்றால் ? சரிதான். விற்பனை செய்ய 3–ம் பிரதிவாதிக்கு போதிய நிதிவசதி இல்லாமல் பரமேஸ்வரி என்பவரிடமிருந்து 04.06.2013ம் தேதி பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை பொறுப்பிற்காக கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்து ரூ.11,00,000 கடன் பெற்றார் என்றால் ? சரியல்ல. சரியல்ல என்று சொல்லியுள்ள நிலையில் நான் எதன் அடிப்படையில் சரியல்ல என்று சொல்கிறேன் என்றால் ? சுத்திகரிப்பு ஆலைக்காக கடன் வாங்கவில்லை. வரதராஜ் என்பவர் தனியாக பைனான்ஸ் வைத்திருந்தார், மாட்டுப்பண்ணை நடத்தி வந்தார், அது அல்லாமல் அவரது

மனைவி பெண்கள் அழகு நிலையம் வைத்துள்ளார் அதற்காக அவர்கடன் வாங்கியிருப்பார். நான் சொல்வது தவறு என்றால் ? சரியல்ல. மேற்படி தொகை பற்றதாத காரணத்தினால் கடந்த 19.07.2013ம் தேதி பி.வா.சா.ஆ.8 கிரைய உடன்படிக்கை பொறுப்பிற்காக எழுதிக் கொடுத்து ஒரு செல்வராஜ் என்பவரிடம் தொகை ரூ.4,50,000 கடன் பெற்றார் என்றால் ? அந்த ஆவணம் மட்டும் தான் எனக்கு தெரியும். சென்னியப்பன் என்பவரிடமிருந்து தொகை ரூ.4,50,000 கடந்த 19.07.2013ம் தேதி தொகையினை கடனாக பெற்று கிரைய உடன்படிக்கை பொறுப்பிற்காக எழுதிக் கொடுத்தார் என்றால் ? கிரைய உடன்படிக்கை எழுதிக் கொடுத்தார் என்பது சரிதான். ஆனால் கடனிற்காக எழுதிக் கொடுத்தார் என்பது தவறு. தண்ணீர் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு 3–ம் பிரதிவாதிக்கு முன்அனுபவம் இல்லாத காரணத்தினால் மேற்படி கடன்களை தீர்க்கவும், மேற்படி சுத்திகரிப்பு ஆலை அமைப்பு அமைக்க தொடர்ந்து ஆகும் செலவுகளுக்கும் எனது தகப்பனார் பழனிச்சாமியிடமிருந்து ரூ.25,00,000 கடன் பெற்று பொறுப்பிற்காக ஒரு பகுதி சொத்தை எனது தாயார் பெயருக்கு 14.03.2014ம் தேதியிலும் மற்றொரு பகுதி சொத்தை எனது பெயருக்கு 30.04.2014ம் தேதியிலும் பொறுப்பிற்காக கிரையம் எழுதிக் கொடுத்தார் என்றால் ? சரியல்ல. சுத்த கிரையத்திற்கு வாங்கிய சொத்தினை கடனுக்காக வாங்கியதாக சொல்வது அனைத்தும் தவறு ஆகும். பரமேஸ்வரி என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தை 30.04.2014ம் தேதி பி.வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் ரத்து செய்து அதே தேதியில் எனக்கு வா.சா.ஆ–11 ஆவணம் மூலம் பொறுப்பிற்காக 3–ம் பிரதிவாதி கிரையம் எழுதிக் கொடுத்தார் என்றால் ? அது தவறு. செல்வராஜ் மற்றும் சென்னியப்பன் ஆகியோர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரைய உடன்படிக்கைகளையும் ரத்து செய்து கொடுத்துவிட்டார் என்றால் ? சரிதான். வரதராஜ் எனக்கும், எனது தாயாருக்கும் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணங்கள் மலரணையான கிரைய ஆவணம் என்றால் ? சரியல்ல. கடன் பொறுப்பிற்காக வாங்கியதால் தான் எனக்கு

முன்பத்திரங்கள், மூல ஆவணங்கள் பற்றி தெரியவில்லை என்றும், உண்மையாக கிரையத்திற்கு வாங்கியிருந்தால் அந்த ஆவணங்களை படித்து பார்த்து தெரிந்து இருப்பேன் என்றால் ? சரியல்ல. கிரைய ஆவணங்களில் எனக்கு சுவாதீனங்கள் கொடுக்கப்படவில்லை என்றால் ? சரியல்ல. தண்ணீர் சுத்திகரிப்பு ஆலை மின் இணைப்பு எண்.387, 2013ம் ஆண்டில் இருந்து மேற்படி மின் இணைப்பு மின்வாரியத்தால் 05.06.2018ம் தேதி துண்டிக்கப்படும் வரை இயங்கி வந்தது என்றால் ? சரிதான். மின்இணைப்பு 3-ம் பிரதிவாதி பெயரில் தான் இருந்தது என்றாலும், அதற்கான கட்டணத்தை அவர் தான் செலுத்தி வந்தார் என்றாலும் ? சரிதான். சுத்திகரிப்பு ஆலைக்குண்டான சொத்து வரியையும் 3-ம் பிரதிவாதி தான் செலுத்தி வந்தார் என்றால் ? சரிதான். தாவா சொத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு ஆலை, கட்டிடங்கள், இயந்திரங்கள், மின் இணைப்பு எண்.387 ஆகியவை எங்களது கிரைய ஆவணங்களில் எதுவும் காட்டப்படவில்லை என்றால் ? சரிதான். மின் இணைப்பு எண்.363ல் உள்ள வீட்டில் எங்களது கிரைய காலத்திற்கு முன்பு இருந்து நாளது தேதி வரை 3-ம் பிரதிவாதியும், அவரது குடும்பத்தாரும் தொடர்ந்து குடியிருந்து வருகிறார்கள் என்றால் ? சரியல்ல. கிரையம் பெற்றதற்கு பிறகு சொத்துக்களை நிறைய சீர் அமைத்தோம். பின்பு இருப்பதற்கு இடம் இல்லை என்றும், வேறு இடம் பார்த்து கொண்டு இருப்பதாகவும், இடம் அமைந்தவுடன் சுத்திகரிப்பு ஆலையையும், குடியிருப்பு வீட்டையும் மாற்றி கொள்வதாகவும் சொன்னதன் பேரில் நாங்கள் இருந்து கொள்ள அனுமதி அளித்தோம். மின் இணைப்பு எண்.363 ல் மின் கட்டணம் 3-ம் பிரதிவாதி தான் செலுத்தி வருகிறார் என்றால் ? அவர் பெயரில் தான் உள்ளது. கட்டணம் நாங்கள் தான் செலுத்தி வருகிறோம். 1 அல்லது 2 மாதங்கள் மட்டும் 3-ம் பிரதிவாதி செலுத்தி வந்தார். பட்டா, கிஸ்தி ரசீதுகள் 3ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் ? சரியல்ல. எனது பெயரில் தான் உள்ளது. தாவா சொத்தில் எனக்கு சுவாதீனம் ஒருபோதும் வழங்கப்படவில்லை என்றாலும், 3-ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் ? சரியல்ல. தாவா

சொத்தினை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது நான் உடன் இருந்தேனா என்றால் ? அன்றைய தினம் நான் வெளியில் சென்றுவிட்டேன். நான் அங்கு இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், அன்றைய தினம் நான் அங்கு இருந்தேன் என்றாலும்? சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் ? படித்து பார்த்தேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் தண்ணீர் சுத்திகரிப்பு ஆலை, அதன் சாதனங்கள் வழக்கு சொத்தில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் ? சரிதான். 3–ம் பிரதிவாதி எனது தகப்பனாரிடம் பெற்ற கடன் முழுவதையும் செலுத்தி கிரையத்தை ரத்து செய்து மீண்டும் அவரது பெயருக்கு கிரையம் கேட்டதில் எனது தகப்பனார் மேற்கொண்டு வட்டிக்காக ரூ.10,00,000 கொடுக்க வேண்டும் என்று கூறியதால், 3–ம் பிரதிவாதி அவரது தாயாரின் வங்கி கணக்கில் இருந்து எனது தகப்பனாரின் வங்கி கணக்கிற்கு ரூ.10,00,000 கடந்த 11.01.2019ம் தேதி NEFT மூலம் செலுத்தியுள்ளார் என்றாலும், அதை பெற்றுக் கொண்டு 3–ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், பொறுப்பிற்காக எழுதிக் கொடுத்த கிரையத்தை ரத்து செய்யவில்லை என்றும் சொன்னால் ? சரியல்ல. மேற்படி தொகை ரூ.10,00,000 தொகையினை மாட்டு தீவணம் பெற்றதற்காக கொடுத்ததாக சொல்லியிருப்பது தவறு என்றால் ? சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/3 பாகமும், 3–ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும் பாத்தியம் என்று சொன்னால் ? சரியல்ல. நான் வழக்கிற்காக தவறான சங்கதிகளை சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வாதத்தை ஏற்றுக் கொள்ளகூடாது என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.06.24 17:44:25 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்